2019 ஜூலை 10]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தை ஆய்வு செய்து, கள்ளக்குறிச்சியிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்தின் வழித்தடத்தை நீட்டிப்பு செய்து, ஆத்தூரிலிருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியத்திற்கான பயிற்சி

***42766—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கிராமங்களில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி வழங்கி ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலைகளின் காதலன், நடமாடும் பல்கலைக்கழகம் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய நூற்றாண்டு பிறந்த நாள் இன்று. அன்னாருக்கு இந்தச் சபையில் அஞ்சலியைச் செலுத்துவதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தன் வாழ்நாளையே கலைகளுக்கு அர்ப்பணித்த கலை அரசியாய்த் திகழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த சீரிய திட்டங்களின் வாயிலாக இசை மற்றும் நடனத்தை ஊராட்சிகளுக்குக் கொண்டு செல்ல தமிழக அரசு பாடுபடும் என்பதை இவ்வினாவிற்கு விடையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 10

(மேசையைத் தட்டும் ஒலி) இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் படைத்த சாந்தி நிகேதன் வடிவில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வடித்தெடுத்த தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் சார்பாக தற்போது அரசு இசைக் கல்லூரிகள் 4; மாவட்ட இசைப் பள்ளிகள் 17; மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் 3, affiliated இசைக் கல்லூரிகள் 14 மற்றும் 40 ஜவஹர் சிறுவர் மன்றங்களின் சார்பாக ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, தமிழ் இசை மற்றும் கர்நாடக இசை, நடனப் பயிற்சி–பரதநாட்டிய பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதில்; 80 அமைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில், 79 அமைப்புகள் நகர்ப்புறம் சார்ந்தவையாக இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டம், பொன்புதுப்பட்டியில் முதல்முறையாக பரீட்சார்த்த அடிப்படையில் ஜவஹர் ஊரக சிறுவர் மன்றம் துவங்கப்பட்டு, அதன் மூலமாக இசை, நடனம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் விரிவாக்கம் செய்வதற்கான அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் வரவிருக்கின்றன. அதுபோக, Dr. Anil Srinivasan மூலமாக இசைவழிக் கல்வி–Rhapsody Music மூலமாக தற்போது 70 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நமது பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக கல்வித் தொலைக்காட்சி வெகுவிரைவில் வரவிருக்கிறது. அதிலே slot எடுத்து, அனைத்து ஊராட்சிகளுக்கும் இசை, நடனத்தை எடுத்துச்செல்வோம்.

முற்பகல் 11–05

தமிழ் பண்பாட்டு மையம் மூலமாக Tamil Nadu Virtual Academy இணையதளத்தில் ‘இல்லம்தோறும் இணையம்’ திட்டம் முழுமை பெறுகிறபொழுது, அனைத்து ஊராட்சிகளுக்கும் இசை, நடனப் பயிற்சி Trinity School of Music Model–ல் 9 தளங்களில் கொண்டு செல்ல அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்கிறது. இந்த ஆண்டு அனைத்து ஊராட்சிகளுக்கும் இணையம் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் மற்றும் ஜவஹர் சிறுவர் மன்றம் மூலமாகவும், தமிழ் இசை, கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியத்தின் அனைத்து அங்கங்களும் எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

2019 ஜூலை 10]

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியாவிலே தேசிய நடனமாகக் கருதப்படுவது நம்முடைய பரத நாட்டியம். பரத நாட்டியமாகட்டும், கர்நாடக சங்கீதம் ஆகட்டும்; இவை இரண்டும் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தஞ்சை படுகையில் தோன்றியவை. பரத நாட்டியத்திற்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கூத்து, ஆடல், நாட்டியம், தேவரடியார் பெண்கள் ஆடும்போது சதுராட்டம் என்ற பெயர் இருந்தது. பிறகு பல்வேறு காரணங்களால் 1930–ல் அதற்கு பரத நாட்டியம் என்று பெயரிடப்பட்டது. 1996 ஆம் ஆண்டில் என்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்கள் ஓர் ஆய்வுக் கட்டுரை,* article *எழுதியிருக்கிறார்.* Tamil Cultural Elites and Cinema *என்ற தலைப்பில்* caste exclusivity *முக்கியமாக பரதமும், கர்நாடக சங்கீதமும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடையே மட்டுமே இருக்கிறது. அதிலிருந்து அதை மீட்டெடுக்க வேண்டும் என்று ஒரு கட்டுரை எழுதியபோது, சமூக நீதிக்காக என்றும் குரல் கொடுத்து வந்து, தற்போது வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கும் எங்களுடைய தலைவர் அன்று இதைப் படித்தார். 1977–ல் திருவாரூர், திருநெல்வேலி, திருச்சி, சேலம், தஞ்சை, புதுக்கோட்டை, 1999–ல் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, 2000 ஆம் ஆண்டில் ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய 17 மாவட்டங்களில் இந்த இசைப் பள்ளிகளை அமைத்த பெருமை எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கே உண்டு என்று நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அதிலே முக்கியமாக பரதம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் போன்றவைதான் இப்போது சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மூன்று வருட* certified course *ஆகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். உங்களுக்குத் தெரியாதது கிடையாது. இன்றைக்கு* Europe, America *போன்ற மேலை நாடுகளுக்கு நீங்கள் போனால் காணலாம். சிறிய வயதினருக்கு எப்படி* Special Sports School *இருக்கிறதோ, அதேமாதிரி* Special dance, drama and music schools *இருக்கின்றன.* Regular studies*–ல் இருக்கிற* best students*–ஐ எடுத்து, அவர்களுக்கு இதிலேயே பயிற்சி தருகிறார்கள். இது ஒரு* short term course *ஆக இருக்கிறது. அதை இன்னும் விரிவுபடுத்தலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. இத்தகைய கருத்துரு இந்த உங்களுடைய அரசிடம் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17 மாவட்டங்களில் இசைப் பள்ளிகளை உருவாக்கியது கலைஞர் அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் அதை அனைத்தும் மாலையாகத் தொடுத்து, 4 அரசு இசைக் கல்லூரிகளையும், 14 affiliated இசைக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து, இந்தியத் துணைக் கட்டத்திலேயே முதல் முறையாக இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகங்களை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொன்ன அந்த certificate courses–ஐ ஏற்கெனவே நாங்கள் 3 இசைக் கல்லூரிகளிலும், மாலை நேர இசைக் கல்லூரி மையங்களாக (Community College) உருவாக்கி, இரண்டு ஆண்டுகள் certification course ஆக நடத்திக் கொண்டிருக்கிறோம். இதை எல்லாக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம். அதேபோல், நமது இசைப் பள்ளிகள்; அந்த இசைப் பள்ளிகளை Community College ஆகவும், இசைக் கல்லூரிகளாகவும் உருவாக்கும் திட்டம் இந்த ஆண்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. Community College கொடுக்கிறபோது மத்திய அரசாங்கத்தின் support கிடைக்கும். அதனால் அந்தத் திட்டத்தையும் இந்த ஆண்டு செயல்படுத்த இருக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக இணையத்தின் மூலமாகக் கொண்டு செல்ல திட்டமிட்டிருக்கிறோம். கிராமத்தில் இருக்கிற ஒவ்வொரு மாணவருக்கும் கையில் laptop-ஐக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம். அதனால், அந்த laptop–ல் இணைய வசதி கிடைக்கிறபொழுது மாணவர்கள் அதை automatic ஆக download செய்து, அந்தக் கலைத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். அதுதான் இந்த ஆண்டின் முக்கிய பயணமாக இருக்கப் போகிறது. இன்றைக்கு 5 ஆயிரம் மாணவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். வரும் வருடம் 50 ஆயிரம் மாணவர்களுக்குமேல் இந்தத் திட்டத்தின் மூலமாக இணையத்தில் இணைந்து, கலைகள் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். வாய்ப்புக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

2019 ஜூலை 10]

முற்பகல் 11–10

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான பதிலுக்கு நன்றி. இன்றைக்கு 5 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். இன்னும் அதிக அளவு மாணவர்கள் படிக்க வேண்டும். முக்கியமாக கிராமியக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அதிக அளவு மாணவர்கள் வருவார்கள். ஏனென்றால், தமிழ்நாட்டில் பிற நடனங்கள் என்று பார்த்தீர்களென்றால், பொம்மலாட்டம், சக்கையாட்டம், தேவராட்டம், காமன் பண்டிகை, கைசிலம்பாட்டம், களியாட்டம், கரகாட்டம், காவடிச் சிந்து, கழைக்கூத்து, கோலாட்டம், பொய்க்கால் ஆட்டம், கும்மி; கும்மியிலே பலவகையான கும்மிகள் இருக்கின்றன. தீப கும்மி, குலவை கும்மி, கதிர் கும்மி, முளைப்பாரி கும்மி, மயிலாட்டம், ஒயிலாட்டம் முக்கியமாக, தெருக்கூத்து, பறையாட்டம், புலியாட்டம் என்று பலவகையான* Folk dances *தமிழ்நாட்டில் இருக்கின்றன. இன்றைக்குப் பெரிய அளவில் கிராமப்புறங்களில் மாணவர்கள், அவர்களாகவே சுயமாக அவர்களுக்குத் தெரிந்த வரையில் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் பரத நாட்டியம்,* high end musical instruments, *தவில் போன்றவற்றை எல்லாம் சொல்லிக் கொடுக்கும் அதேசமயத்தில், தயவு செய்து நம்முடைய கிராமப்புறக் கலைகளையும் இணைத்து,* fusion–*ஐக் கொண்டுவந்து, ஒருங்கிணைந்து செயல்பட்டு, சிறந்த பள்ளிகளைத் தமிழ்நாடு முழுவதும் தொடங்கிட வேண்டும். ஏனென்றால், பலவகைகளில் இந்த இந்தியத் துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்குவது நம்முடைய தமிழ்நாடு. அந்தப் பெருமையைப் பெற்றுத் தந்தவர் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த வழியில் நாம் அதைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்முறையாக புரட்சித் தலைவி அம்மாவின் அரசுதான் சென்னைக்கு* Creative City Network *என்ற திட்டத்தின்கீழ்,* UNESCO–*விடமிருந்து இசை நகரம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இன்றைக்கு ஒரு மாவட்டத்திற்கு 10*

கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, மொத்தம் 320 கலைஞர்களுக்கு தலா 10,000/– ரூபாயை தன் கரங்களாலேயே அளித்த முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மட்டும்தான். இதுவரையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலே நடக்காத ஒரு விஷயம். அதேபோல, கலைஞர்களை மகிமைப்படுத்திய அரசாங்கம், அம்மாவின் அரசாங்கம். நாட்டுப்புறக் கலை வாரியத்திற்கு உயிர் கொடுத்து, மற்ற வாரியங்களுக்குக் கிடைக்கிற 9 benefits*–ஐயும் கொடுக்க வைத்தது மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசாங்கம்தான். இதுவரைக்கும் வேறு எந்த அரசாங்கமும் செய்யவில்லை. கலைஞர்களைப்பற்றி பல இடங்களிலே எடுத்துப் பேசியது உங்கள் அரசாங்கம். ஆனால், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிசெய்தது அம்மாவின் அரசாங்கம் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.* (*மேசையைத் தட்டும் ஒலி*)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரும் இரண்டு மசோதாக்களை மேதகு குடியரசுத் தலைவர் திருப்பியனுப்பியுள்ளது பற்றிய தகவலை அவைக்குத் தெரிவிக்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் இதே அவையிலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்* NEET *பிரச்சினை பற்றிய விவாதம் இங்கே நடைபெற்ற நேரத்திலே சில விளக்கங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் ஒருசில கருத்துகளைக் கொண்டுவர விரும்புகிறேன்.*